செ.வெ. எண்:56/ஜூலை நாள்:31.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## "அம்மா சிமெண்ட்" திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 22,679.95 மெட்ரிக் டன் அளவில் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் அம்மா சிமெண்ட் திட்டத்தின் கீழ் கடந்த ஜனவரி 2015 முதல் இதுநாள் வரை 22,679.95 மெட்ரிக் டன் அளவில் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு பொதுமக்கள் பயனடைந்துள்ளனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு அரசு நடுத்தர மக்களின் "சொந்த வீடு" கனவை நனவாக்கும் வகையில், வீடு கட்டுவதற்கு தேவைப்படும் அத்தியாவசிய மூலப்பொருளான சிமிண்ட் மூட்டையை வெளிமார்க்கெட்டுகளை விட மிகக்குறைந்த விலையில் பெற்று பயனடைய ஏதுவாக "அம்மா சிமிண்ட்" திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வீடு கட்டும் நடுத்தர மக்கள், வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்பனையாகும் சிமிண்ட்டை வாங்கும்போது, அவர்களின் பொருளாதார கடன் சுமையை அதிகரிக்கிறது. இதைக் குறைக்கும் வகையில், ஒரு மூட்டை சிமிண்ட் ரூ.190/- என்ற மிகக்குறைந்த விலையில் சிமிண்ட் வழங்கும் "அம்மா சிமிண்ட் திட்டம்" தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில், தமிழகத்தில் உள்ள தனியார் சிமிண்ட் உற்பத்தி நிறுவனங்களான செட்டிநாடு, ராம்கோ, அல்ட்ராடெக், இந்தியா, டால்மியா, அசோசியேட், ஜீவாரி ஆகிய நிறுவனங்களின் உற்பத்தி திறனுக்கு ஏற்றவாறு மாதம் 2 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்ட்டை இத்திட்டத்திற்காக அரசுக்கு வழங்குகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் தகுதியான பயனாளிகளுக்கு கட்டுமான பணிக்கு 500 சதுர அடி வரையில் அதிகபட்சமாக 250 மூட்டைகளும், 501 முதல் 1000 சதுர அடி வரை அதிகபட்சம் 500 மூட்டைகளுகம், 1001 முதல் 1500 வரை அதிகபட்சமாக 750 மூட்டைகளும் வழங்கப்படுகின்றன. இது மட்டுமில்லாமல், வீடுகளை பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் குறைந்தபட்சம் 10 முதல் 100 மூட்டைகள் வரை சிமிண்ட் வழங்கப்படுகிறது. இது தவிர, முதலமைச்சரின் பசுமை வீடுகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கும் குறைந்த விலையில் அம்மா சிமிண்ட் வழங்கப்படுகிறது.

அம்மா சிமிண்ட்டைப் பெறுவதற்கும் பொதுமக்கள் வீடு கட்டுவதை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட வீடு கட்டும் திட்டத்தின் வரைபடம் அல்லது கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மேற்பார்வையாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சாலை ஆய்வாளர் இவர்களில் யாரேனும் ஒருவரிடம் சான்றிதழ் பெறப்பட்டு ஒப்படைக்கப்படவேண்டும். மேலும், இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் சிமிண்ட் மூட்டைகளை முறையாக தங்களது சொந்த உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்துகிறோம் என உறுதிமொழிக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அம்மா சிமிண்ட் திட்டம் 14.01.2015 தொடங்கப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக இராமநாதபுரம், இராமேஸ்வரம், கடலாடி, திருவாடானை, கமுதி, முதுகுளத்தூர், கீழக்கரை மற்றும் பரமக்குடி ஆகிய 8 இடங்களிலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக மண்டபம், போகலூர், திருப்புல்லாணி, ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் நயினார்கோவில் ஆகிய 5 இடங்களிலும் என மொத்தம் 13 இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஊரக வளர்ச்சி முகமை மூலம் 9627 மெ. டன்கள் சிமிண்ட் வரப்பெற்று 30.06.2017 வரை 9393.20 மெ. டன் அளவிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் 13351.50 மெ. டன்கள் சிமிண்ட் வரப்பெற்று 30.06.2017 வரை 13286.75 மெ. டன் அளவிலும் சிமின்ட் விற்பனை செய்யப்பட்டு, பொது மக்கள் பயனடைந்துள்ளனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**